

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று ஓட்டேரி, பிரிக்கிளின் சாலை சந்திப்பு, வெங்கட்டம்மாள் சமாதி தெருவில், சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழாவில் "திராவிட தத்துவம் தீராத இலட்சியம் என்ற தலைப்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் விழாப் பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மேயர் ஆர்.பிரியா ராஜன், கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, மண்டல குழு தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு ! மாஸ் டி.வெங்கடேசன் தலைமை !

## ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் !

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி -ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை செப்.27

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் 22.09.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9.00 மணியளவில் நேதாஜிநகர் பகுதி நாடார்கள் உறவின் முறை சங்க திருமண மாளிகை, செ81ல் நடைபெற்றது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் நிகழ்ச்சிகான ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் மாஸ் டி.வெங்கடேசன் தலைமை வகித்தார்.பகுதி கழக நிர்வாகிகள் எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.ரீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கே.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், ஏ.மணிமேகலை, ஆகியோர் வரவேற்றனர்.

கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் இரா.லட்சுமணன், சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, இ.ரவிகுமார், எஸ்.சொக்கலிங்கம், பா.வேதாசலம், ஜி.ராஜா, மீஞ்சூர் ஜி.முகுந்தன், டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, எஸ்.எம்.அப்துல்ஹ்மான், எஸ்.பொன்ராஜ், எம்.சுசிலா, எஸ்.சரவணகுமார், எஸ்.ராஜசேகர், ஏ.கே.பால்சாமி, எம்.ரசூல்மொய்தீன், டி.கே.ரத்தினகுமார், கே.யுவராஜ், ஏ.கோவிந்தராஜ், எம்.ஆர்.பி.பழனி, என்பீல்டுதுரைராஜ், எஸ்.சுப்பிரமணி, எஸ்.பாஸ்கர், பி.விஜியா, எஸ்.தமிழரசன், பி.முருகன், வி.மூர்த்தி, என்.பி.அஜித், என்.சுப்புராயன், டி.தேவேந்திரன், வி.ராஜேஸ்வரி, எஸ்.சூரியபிரபா, கே.அருண்குமார், எஸ்.கிருஷ்ணன், கே.பார்த்தசாரதி, வி.கார்த்திக், ஆர்.சூர்யகாந்தா, ஆர்.நீலிமா, ஏ.எஸ்.சுலோச்சனா, எம்.பாக்கியலட்சுமி, ஆ.ஜெபகுமாரி, எஸ்.நூரி, எஸ்.சோபனா, எம்.பானு, கே.சுமதி, ஜி.சந்தியா, டி.நவீன்குமார், ஓம்சிவக்குமார், பி.விக்னேஷ், கே.முரளி, கு.மோகன்ராஜ், எஸ்.தமிழரசன், டி.பிரபு, எம்.ரமேஷ், வி.கார்த்திக், கே.காளிதாஸ், டி.திலகர், எம்.உமாமகேஷ்வரி, எம்.பி.கிளைமன்ட்ராஜ், எஸ்.ஜெகன், ஆர்.ராதிகா, வி.விஜயகுமார், சி.சென்சம்மாள், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக முன்னாள் நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக பணியாளர்கள் சார்புமன்றம், இளைஞர் மன்றம், மகளிர் மன்ற நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மு.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக

## மாணவர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், செப்.27-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருகிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கனின் அறிவுறுத்தலின் படி தி.மு.கழக மாணவர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்தி உரிய தகுதியுள்ளவர்களை நிர்வாகிகளாக தேர்வு செய்திட கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலசன் எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

மாநில மாணவர் அணி இணைச்செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை.த.சோழராஜன் ஆகியோர் நேர்காணலை நடத்தி வைப்பவர்கள் அதனடிப்படையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான நேர்காணல் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு svk திருமண மண்டபம், சத்திய வேடு சாலை, கவரைப்பேட்டையில் நடைபெற உள்ளது.

ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு 30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே நேர்காணலில் கலந்த கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்பு (டிப்ளமோ) படித்திருக்க வேண்டு ம், கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக 5 பேரும் தேர்வு செய்யப்படுவர்கள். இதில் ஒரு துணை அமைப்பாளர் மகளிராகவும், ஒரு துணை அமைப்பாளர் கல்லூரி அல்லது பட்டய படிப்பு படித்து கொண்டிருப்பராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில் சம்மபந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களுக்கு உட்பட்ட மாணவரணியினர் கலந்து கொள்ளவும் அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் வெற்றி (எ)ராஜேஷ், துணை அமைப்பாளர்கள் டி.ஜெ.ஜி.தமிழரசன், த.தமிழழகன், எஸ்.சேதுராமன், யு.விக்னேஷ் உதயன், பி.தனலட்சுமி செய்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### டி.கருணாநிதி தலைமை!

## 107-வது வட்டக் கழகக் கூட்டம்!

### ந.இராமலிங்கம் சிறப்புரை

சென்னை, செப். 27-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 107 வது வட்ட செயலாளர் டி. கருணாநிதி தலைமையில் நடந்த பொது உறுப்பினர் கூட்டத்தில் பகுதி செயலாளர் ந. இராமலிங்கம் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் எஸ்.பி.குமார், ஏ.கே.மூர்த்தி, ஆர்.எஸ். கில்பட், பானுமதி, கிருஷ்ணசாமி, ஜீவகன் அய்யநாதன், யூனிஸ் மைதீன், வெற்றிச்செல்வன், டி. ராஜ்குமார், வட்ட செயலாளர்கள் நா. அதியமான், ந. பொன்னுரங்கம், ரா.ரவீந்திர குமார், ப. மகேஷ்ராஜா, வி.எம். சிவா, யோகேஸ்வரி, சியாமளா செந்தில்,டி. உமாதர்மராஜ், ஜி.மலர்விழி, கே.என்.பாலன், வி.தாராவீரன், வாசுதேவன்,இ. கன்னியப்பன் ரபிக் ராஜ், எஸ். ராமு, தீபா தனசேகர் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி, 167 வது வட்ட திமுக சார்பில், 167 வது வட்டக் கழக செயலாளர் ஜெ.நடராஜன், 167–வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் தலைமையில், 167–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் 100 அடி ரோடு ஸ்கேட்டிங் கிரவுண்ட் அருகில், இந்திய அஞ்சல் துறை நடத்தும் சிறப்பு ஆதார் முகாமை, ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டல குழு தலைவருமான,என். சந்திரன் துவக்கி வைத்தார். 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ஆர். டி. பூபாலன், மாவட்ட பிரதிநிதி வெங்கட்ரமணா,துரைராஜ்,கிருஷ்ணன், அப்பலோசுரேஷ், மீன் மோகன், பெயின்டர் துரை, குருமூர்த்தி, குணா, சதீஷ், சரவணன், கோபால், நலசங்க நிர்வாகிகள், ரவீன்ந்தரன், ரவி, தேவி ஸ்டோர் ராஜாமணி, கழக நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்,

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும்,

## கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (BLC) வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8-லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்-6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்-6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உரையாற்றும்

## காஞ்சிபுரம் தி.மு.க. பவள விழாப் பொதுக்கூட்டத்தில் பெருவாரியாக பங்கேற்பீர்!

### உத்திரமேரூர் ஒன்றியக் கழகத்தினருக்கு கெ.ஞானசேகரன் வேண்டுகோள்

காஞ்சிபுரம், செப். 27,

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் உத்திரமேரூர் ஒன்றியக் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் பங்கேற்பீர் என ஒன்றியச் செயலாளர் கெ.ஞான சேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அது வருமாறு

தி.மு.கழக பவள விழாவையொட்டி கொள்கைக் கூட்டணிக் கட்சித் தலைவர்களைக் கொண்டு மாபெரும் பொதுக்கூட்டம் அண்ணா பிறந்த மண் காஞ்சிபுரத்தில் நாளை ( 28.9.2024 சனிக்கிழமை) அன்று மாலை 5 மணிக்கு பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டுத் திடலில் தி.மு.க.பவளவிழா மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உரையாற்றுவார்கள். இக்கூட்டத்திற்கு கழகப்பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் தலைமை வகித்து பேசுகிறார். தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகிக்கிறார்.

இந்த வரலாற்று சிறப்பு மிக்க தி.மு.க.பவளவிழா பொதுக்கூட்டத்தில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.வின் வேண்டுகோளின்படி, நமது உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஊராட்சிக் கிளைக் செயலாளர்கள் அனைவரும் தங்களது ஊர்களில் இருந்து கழகத்தினர், பொதுமக்களுடன் ஒன்றியம் சார்பில் 3 ஆயிரம் பேர் பங்கேற்கும் வகையில் பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் கெ.ஞான சேகரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### காஞ்சிபுரத்தில் பவள விழாப் பொதுக்கூட்டம்!

## பெருங்களத்தூர் வடக்குப் பகுதியினர் பங்கேற்பீர்

### பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை

தாம்பரம், செப். 27-

பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் காமராஜ் வேண்டுகோள் வருமாறு: -

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் செயற்க்குழு கலந்து ஆலோசனை கூட்டம். புதன் கிழமை மாலை 7.00 மணியளவில் மேற்கு தாம்பரம் வெங்கடேசன் தெருவில் உள்ள கழக அலுவலகத்தில் பகுதி கழக அவைத் தலைவர் மாமன்ற உறுப்பினர் டி.ஆர். கோபி தலைமையில் பகுதி கழக செயற்க்குழு கலந்த ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் பகுதி, நிர்வாகிகள், பகுதி, மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள், கலந்து க்கொண்டனர் 28.09.2024 அன்று காஞ்சிபுரத்தில் நடைப்பெறும் கழக பவள விழா கூட்டத்திற்கு பகுதி கழக சார்பில் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வோம் என தீர்மானிக்கப்பட்டது அடுத்த மாதம் தொடங்கவுள்ள வாக்காளர், சேர்த்தல், நீக்கல் முகாமில் பகுதி கழக நிர்வாகிகளும் வட்ட கழக செயலாளர்களும் உள்ளாட்சி மக்கள் பிரிதிநிதிகளும் கழக தோழர்களும் பெரும் அளவில் கலந்து கொள்ளவும் கேட்டு கொள்ளபட்டது. இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி அருகில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், நகரச் செயலாளர் தி.வை.இரவி, நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, நகர் மன்ற துணைத் தலைவர் சரளா நாகராஜ், பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர மன்ற உறுப்பினர் பி.எல்.ஆர்.தேவியோகா, நகர கழக நிர்வாகிகள் அன்பழகன், சி.கமலக்கண்ணன், பாபு, ரவி, வார்டு செயலாளர் சாலிம் உள்பட பலர் உள்ளனர்.